**சார்பு நீதிமன்றம், இராஜபாளையம்**

அசல் வழக்கு எண்.715/2024 நாள்- 20.04.2026

**வா.சா.1. மாடசாமி**

**குறுக்கு விசாரணை பிரதிவாதி தரப்பில்**

பிரதிவாதி என் மனைவி செய்த ஜவுளி வியாபாரத்தில் நைட்டி எடுக்க வந்த போது எனக்கும், பிரதிவாதிக்கும் பழக்கம். நான் எந்த தொழிலும் செய்யவில்லை. என் மனைவியுடன் 2017 ம் ஆண்டு முதல் கொரானா காலகட்ட வரை ஜவுளி வியாபாரம் செய்து வந்தார். பிரதிவாதிக்கு ரூ.4 லட்சத்தை எந்த நம்பிக்கையில் கடன் கொடுத்தேன் என்றால் சொத்து இருப்பதாக கூறியதால் கடன் கொடுத்தேன். பிரதிவாதிக்கும், என் மனைவிக்கும் கருத்து வேறுபாடு காரணமாக பிரியவில்லை கொரானா காலக்கட்டத்திற்கு பிறகு வியாபாரம் நலிவடைந்துவிட்டதால் என் மனைவியுடன் வியாபாரம் செய்யவில்லை. என் மனைவி, பிரதிவாதியுடன் செய்து கொண்ட வியாபாரம் பற்றி அனைத்து விசயங்களையும் என்னிடம் கூறுவது இல்லை. என் மனைவிக்கு , பிரதிவாதி கடன் கொடுக்க வேண்டிய விவரம் எனக்கு தெரியும் எவ்வளவு ரூபாய் என்று எனக்கு தெரியாது. மேற்படி கடனை வசூலிக்க என் மனைவி என்ன முயற்சி எடுத்தார் என்ற விவரம் எனக்கு தெரியாது. கொரானா காலக்கட்டத்தில் பிரதிவாதி என் மனைவிக்கு கடன் கொடுக்க வேண்டியது இல்லை. 10.09.2022 ல் பிரதிவாதிக்கு நான் கடன் கொடுத்தேன். ஏற்கனவே என் மனைவியுடன் பிரதிவாதி செய்த வியாபாரம் நலிவடைந்த பின்பு என்ன வியாபாரம் செய்து வந்தார் என்று எனக்கு தெரியாது. நான் அரசு ஊழியராக பணிபுரிந்து 2017 ம் ஆண்டு ஓய்வு பெற்றதால் ஓய்வூதிய பணப்பலன்கள் என் கைவசம் இருந்தது. பிரதிவாதி கடன் கேட்டதால் தான் பிரதிவாதிக்கு கடன் கொடுத்தேன். ஏற்கனவே என் மனைவியுடன் இருந்த நம்பிக்கையின் பெயரில் பிரதிவாதிக்கு கடன் கொடுத்தேன் என்றால் சரிதான். பிராதில் நான் தொழில் செய்யவில்லை என்றும், என் மனைவி தான் பிரதிவாதியுடன் ஜவுளி வியாபாரம் பார்த்தார் என்றும், எனக்கு பிரதிவாதிக்கு கடன் கொடுக்கும் அளவிற்கு வசதி வாய்ப்பு இருந்தது என்று குறிப்பிடவில்லை என்றால் சரிதான். பிரதிவாதி உடல்நிலை சரியில்லாமல் இருந்தார் என்ற விவரம் 1 வருடத்திற்கு முன்பாக தான் தெரியும். பிரதிவாதியிடம் கடைசியாக 1 வருடத்திற்கு முன்பாக 2025 ம் ஆண்டு கடனை திருப்பி

சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டி சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

ஒப்பம் .திரு.M.சண்முகவேல்ராஜ்,B.A.,B.L.,L.L.M.,
இராஜபாளையம்.

செலுத்த அலைபேசியின் மூலம் கேட்டேன். என் மனைவியுடன் வியாபாரம் செய்த போது பயன்படுத்திய அலைபேசி எண்ணிற்கு தான் பிரதிவாதியை தொடர்பு கொண்டேன். 2022 ம் ஆண்டிலேயே பிரதிவாதி கைகால் செயல் இழந்து பக்கவாத நோய் ஏற்பட்டு வாய் பேச முடியாத நிலையில் கையொப்பம் செய்ய முடியாத நிலையில் இருக்கிறார் என்றும் பிரதிவாதி என்னிடம் பணம் கேட்டதாகவும், கடன் கொடுத்ததாகவும் 2025 ம் ஆண்டு அலைபேசியில் பேசியதாக குறிப்பிடுவது பொய் என்றும் பிரதிவாதி என்னிடம் ஒருபோதும் கடன் வாங்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை சார்பு செய்த போது தான் பிரதிவாதி பக்கவாத நோயால் பாதிப்படைந்திருந்த விவரம் எனக்கு தெரிய வந்தது. பிரதிவாதியை தவிர வேறு நபர்களுக்கு அவசர தேவைக்காக பணம் கொடுத்து வாங்குவது உண்டு. அந்த நபர்களிடம் கடனுறுதிசீட்டு எழுதி வாங்கவில்லை. என் மனைவியிடம் கடன் வாங்கிய சமயத்தில் கடனுறுதிசீட்டு என் மனைவி எழுதி வாங்கியதில்லை. என் மனைவிக்கும், பிரதிவாதிக்கும் எந்த சம்பந்தமும் கிடையாது என்றும் எந்த வியாபாரத் தொடர்பும் என் மனைவியுடன் இல்லை என்றும் நான் தான் 2019 ம் ஆண்டு வியாபார ரீதியாக ரூ.1. ½ லட்சம் பிரதிவாதி எனக்கு கடன் கொடுக்க வேண்டும் என்று சொன்னால் சரியல்ல. ரூ.1. ½ லட்சத்தை திருப்பி கொடுக்க முடியாததால் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட சொத்தை என் மனைவி பெயருக்கு கிரையம் எழுதிக் கொடுத்தார் என்று சொன்னால் கிரையத் தொகை கொடுத்து 05.06.2020 அன்று கிரையம் முடிக்கப்பட்டது. அந்த சொத்தை என் மனைவி வேறு நபருக்கு விற்றுவிட்டார் என்றால் சரிதான். வா.சா.ஆ.1-ல் பிரதிவாதி கையொப்பமோ, கைரேகையோ வைக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.1-ல் பிரதிவாதி என் முன்பாக இடது கை பெருவிரல் ரேகை வைத்தார் என்று சொன்னால் சரியல்ல. எனக்கும் பிரதிவாதிக்கும் எவ்வித வரவு செலவு இல்லை என்றும் பிரதிவாதி பெற்ற ரூ.1 ½ லட்சம் கடனுக்கு ஈடாக பிரதிவாதி என் மனைவி பெயருக்கு கிரையம் எழுதிக் கொடுத்தார் என்றும் வா.சா.ஆ.1- மோசடியாக உற்பத்தி செய்யப்பட்டு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும் நான் கோரும் பரிகாரம் எனக்கு கிடைக்கக்கூடியதல்ல என்றும் வழக்கு தள்ளுபடி செய்யக்கூடியது என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.1- கடனுறுதிசீட்டில் பிரதிவாதியின் கையொப்பமும், கைரேகையும் இல்லை என்று பிரதிவாதி மறுத்துள்ள நிலையில் நிரூபிக்க எவ்வித நடவடிக்கையும்

சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டி சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

ஒப்பம் .திரு.M.சண்முகவேல்ராஜ்,B.A.,B.L.,L.L.M.,
இராஜபாளையம்.

எடுக்கவில்லை என்று சொன்னால் சரிதான்.

சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டி சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

ஒப்பம் .திரு.M.சண்முகவேல்ராஜ்,B.A.,B.L.,L.L.M.,

இராஜபாளையம்.